5. பேரவையில் உரையாற்றும் முறை உள்ளிட்ட நடைமுறைகளை அறிந்துகொள்ளும் வகையில் அனைத்து உறுப்பினர்களுக்கும் பேரவை விதிகள் புத்தகம் வழங்க வேண்டியதன் அவசியம்

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றப் பேரவைக்கு என்று தனி விதிமுறைகள் இருக்கின்றன. ஆகவே, இந்தப் புதிய சட்டமன்றத்தில் பல புதிய உறுப்பினர்கள் இருப்பதால் அவர்கள் அனைவருக்கும் சட்டமன்ற விதிகள் அடங்கிய புத்தகம் ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டதா என்று தெரியவில்லை. அனைவருக்குமே சட்டமன்றப் பேரவை விதிகளின் ஒரு பிரதியை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

அவை விதிகளின்படி Rules of Procedure and Business of the Assembly, *எந்த மாமன்ற உறுப்பினர் இங்கே பேசினாலும், சபாநாயகரைப் பார்த்து "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே" என்று குறிப்பிட்டுப் பேச வேண்டும். எந்தக் கருத்தைத் தெரிவித்தாலும், அவர்கள் பேரவைத் தலைவரைப் பார்த்துத்தான் தெரிவிக்க வேண்டும். பல புதிய உறுப்பினர்கள் பேசுகின்றபோது, அவர்களுக்கு இங்கே நடைமுறைகள் பற்றி சரியாகத் தெரியாததால், பேசுகின்றபோது, "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே" என்று குறிப்பிட்டுவிட்டு, அதன்பின்னர், "மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே", "மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே", "மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே" என்றெல்லாம் அனைவருக்கும் வணக்கம் தெரிவித்துப் பேசினார்கள். இது பொதுக் கூட்ட மேடையில் பேசக்கூடிய ஒரு பாணி. ஆனால், சட்டமன்றப் பேரவையில் பேசுகின்றபோது, பேரவைத் தலைவர் அவர்களைத் தவிர, வேறு யாரையும் குறிப்பிட்டுப் பேசக்கூடாது. "பேரவைத் தலைவர் அவர்களே" என்று சொல்லிவிட்டு, பேச்சை ஆரம்பித்த பின்னர், யாருக்கு வேண்டுமானாலும் நன்றி தெரிவித்துப் பேசலாம்; யாரை வேண்டுமானாலும் பாராட்டலாம்; எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் நன்றி தெரிவித்துப் பேசலாம். ஆனால்,* address *செய்கின்றபோது, "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே" என்பதை மட்டும்தான் சொல்ல வேண்டும். "மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே", "மாண்புமிகு அமைச்சர்*

பெருமக்களே" என்று சொல்லக் கூடாது. இதைத் தாங்களே சொல்லியிருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும், தங்கள் வாயிலாக நான் சொல்லிக் கொள்கிறேன். இதை இனிமேலாவது தாங்கள் வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் குறிப்பிட்டவாறு, ஏற்கெனவே சட்டமன்ற விதிகள் அடங்கிய நூல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அன்புகூர்ந்து அதைத் திரும்பவும் ஆழ்ந்து படித்து, அதன்படி நடக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். புத்தாக்கப் பயிற்சியிலும் இதுகுறித்து தகவல் அளிக்கப்பட்டிருக்கின்றது.*

4. திருத்திய வரவு செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதம்—*தொடர்ச்சி*

HON'BLE SPEAKER: Dr. Nancy Ann Cynthia Francis, you may continue.

DR. NANCY ANN CYNTHIA FRANCIS: The Chief Minister's Comprehensive Health Insurance Scheme which would be launched shortly will upgrade the deficiencies in the earlier scheme of the previous Government. Amma, thank you for this wonderful gift of this Health Scheme and its upgradation, which will definitely be a boon to our less privileged Sisters and Brothers - I mean your Children.

May I once again request permission of the Hon'ble Speaker to make my request. I would like to bring a suggestion here. It would be a good idea, if at the time of issuing the cards for the scheme, it should be made mandatory that every married woman in the family has had a papsmear and at least a clinical breast examination. This will go a long way to prevent those two malignancies which are common to women. Cancer in cervix is the second most common cancer in the Country and accounts for 3 lakh deaths of which 80%